பணிகள் மிக துரிதமாக நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்களின்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

50—

மாணவர் விடுதி

***15280—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதி, இராமநாதபுரம் சேதுபதி அரசு கலைக் கல்லூரியில் மாணவர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரத்தில் உள்ள சேதுபதி அரசு கலைக் கல்லூரியில் 1,804 மாணவ, மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றார்கள். அந்தக் கல்லூரியில் ஆதி திராவிடர் நல விடுதியில் 138 மாணவர்களும், பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியில் 56 மாணவர்களும் விடுதியில் தங்கி, கல்வி பயின்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேதுபதி அரசு கலைக் கல்லூரியில் மாணவியர் விடுதி கட்டுவதற்காக பல்கலைக்கழக மானியக் குழு, அதாவது U.G.C. சில ஆண்டுகளுக்கு முன்பு நிதி ஒதுக்கீடு செய்தும், இன்னும் கட்டப்படவில்லை. அதைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

2013 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இக்கல்லூரியுடன் இணைந்த மாணவியர் விடுதி ஒன்று கட்டுவதற்காக, U.G.C. (University Grants Commission) மூலமாக 11–வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த மதிப்பீடு குறைவாக இருக்கின்ற காரணத்தினால், திருத்திய வரைபடம் University Grants Commission–க்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, 30 இலட்சம் ரூபாய் அந்தக் கல்லூரிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 30 இலட்சம் ரூபாயைப் பெறுவதற்கு திருத்திய மதிப்பீடு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் வந்த பின்பு உடனடியாகக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் அமைந்திருக்கின்ற அரசினர் மகளிர் கல்லூரியில் நான் வைத்த கோரிக்கையை ஏற்று, இந்த அரசு இரண்டு முதுகலைப் பாடங்களுக்கும், இரண்டு பட்டப் பாடங்களுக்கும் ஒப்புதல் கொடுத்து வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன. ஆனால், அந்தக் கல்லூரியிலே போதுமான வகுப்பறைகள் இல்லை. மரத்தடியிலே பாடம் நடத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, இராமநாதபுரம் அரசு மகளிர் கல்லூரிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இராமநாதபுரம் அரசு மகளிர் கல்லூரிக்கு கூடுதலாக பாடப்பிரிவு வேண்டுமென்று கோரிக்கை வைத்திருந்தார்கள். அதன் அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு, அந்தக் கல்லூரிக்கு கூடுதல் பாடப் பிரிவை ஒதுக்கித் தந்தது. அதோடு மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கக்கூடிய 62 கல்லூரிகளுக்கும், எந்தெந்தக் கல்லூரிகளுக்குக் கூடுதல் பாடப் பிரிவு வேண்டுமென்று கேட்கிறார்களோ, அந்தக் கல்லூரிகளுக்கெல்லாம், இதுவரையில் இல்லாத அளவிற்கு, 400 பாடப் பிரிவுகளை கூடுதலாக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அரசு ஒதுக்கித் தந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், அது மகளிர் படிக்கிற கல்லூரி என்பதால், அங்கே அதற்குத் தேவையான கட்டட வசதி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மகளிர் கல்லூரிக்கு சிறப்புச் சலுகை அளித்து, அதைக் கட்டிக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சிவகங்கை மாவட்டத்தில் உள்ள சிவகங்கை அரசு இராஜா துரைசிங்கம் கலைக் கல்லூரி மிகவும் புகழும், பெருமையும் வாய்ந்த கல்லூரிகளில் ஒன்றாகும். அந்தக் கல்லூரி விடுதியில் கிட்டத்தட்ட 100 அறைகள், கட்டப்பட்டன. இப்போது அவை முறையாகப் பராமரிக்கப்படாமல் பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கின்றன. அந்தக் கல்லூரி விடுதியில் பல அமைச்சர்கள், பல சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் படித்திருக்கின்றார்கள். அந்தக் கல்லூரி மிகவும் புகழ்வாய்ந்த, ஏழையெளிய மாணவர்கள் படிக்கின்ற மேன்மைபெற்ற கல்லூரியாகும். பழமை வாய்ந்த அந்தக் கல்லூரியினுடைய விடுதி அறைகளைச் சீரமைத்து பயன்படுத்துவதற்கு சிறப்பு நிதி ஒதுக்க, மாண்புமிகு

2013 மார்ச் 25]

அம்மாவினுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கல்லூரி விடுதி அறைகள் சீரமைக்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அவற்றை சீரமைப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

51—

குளிர்ப்பதனக் கிடங்கு

***4439—திரு. கு.வ. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதியில் மிளகாய் மற்றும் உணவுத் தானியங்களுக்கென குளிர்ப்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதியில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2011–2012–ன்கீழ் விளாத்திகுளம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் மிளகாய் வற்றல் மற்றும் காய்கறிகளுக்கென 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிப்பதன சேமிப்புக் கிடங்கு அமைக்க ரூபாய் 100 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் முடிவுற்று, தற்போது மின் இணைப்பு வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் முழுமையாக முடிவுற்றதும், இக்கிடங்கு,